**இறக்காமம் பிரதேச சபை - 2023**

----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இறக்காமம் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்ல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறக்காமம் பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் 1.6.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்பு நீங்கலாக முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த வருடத்தில் வாகனங்களுக்கான டயர் மாற்றீடு செய்வதற்கான ரூபா 1,311,300 தொகையும் மின்கலம் கொள்வனவு ரூபா 110,800 தொகையும் நிதிக்கூற்றுக்களில் மூலதனச் செலவாக காட்டப்பட்டதை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டுக் கான நிதிகூற்றுக்கள் தயாரிக்கும் போது காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை சீர் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஜனவரி தொடக்கம் யூலை வரைக்குமான முத்திரை தீர்வைக் கட்டணம் ரூபா 901,500 தொகை மற்றும் ஆகஸ்ட் தொடக்கம் திசெம்பர் வரைக்குமான தொகை கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் மீளாய்வாண்டுக்காக பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வை கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய வருமானமாக காட்டப்படும். | குறித்த காலப்பகுதிக்கான வருமானத்தினை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1),(2), (3) | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 518,775 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் சபை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புப் பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு உரிமையாளர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு பெற்றுக் கொள்ளாத பட்சத்தில் வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம், காலங்கடந்த வைப்புக்களை உரிய நபர்களிற்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 826,053 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 453,208 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 2,170,000 | 576,441 | 576,441 | - | 890,000 | 279,735 | 279,735 | - |
| (ii) | வாடகை | 2,805,000 | 863,350 | 863,350 | 1,094,473 | 2,305,000 | 1,007,828 | 1,007,828 | 1,071,583 |
| (iii) | உத்தரவுப்பத்திரக் கட்டணம் | 1,260,000 | 1,106,810 | 1,106,810 | - | 1,240,000 | 879,970 | 879,970 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,530,000 | 3,016,175 | 3,016,175 | - | 6,910,000 | 5,341,899 | 5,341,899 | - |
| (v) | கூட்டுத் தொகை | 10,765,000 | 5,562,776 | 5,562,776 | 1,094,473 | 11,345,000 | 7,509,432 | 7,509,432 | 1,071,583 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கேள்வி மீதான குத்தகை வழங்கலிலிருந்து பெறவேண்டிய ரூபா 1,029,223 தொகை 14 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாது நிலுவையாகவுள்ளது. | 2011.04.01 ஆந் திகதியிருந்து புதிய சபையாக உருவாக்கப்பட்ட போது நிலுவைக்கான எவ்வித ஆவணங்களுமின்றி சம்மாந்துறை பிரதேச சபையிடமிருந்து கிடைக்கப் பெற்றமையினால் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைகளுக்கான உரிய ஆவணங்களை பெற்று அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திறந்த வெளிச் சந்தையினை ரூபா 155,000 தொகையில் குத்தகைக்கு வெளிநபருக்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் குத்தகைக்கு வழங்காமல் சபை ஊழியர்களை கொண்டு சபையினால் அறவீடு செய்யப்பட்டிருக்குமாயின் மீளாய்வாண்டில் அண்ணளவாக ரூபா 515,000 தொகை வருமானத்தினை உழைத்திருக்க முடியும். | விவசாய அறுவடைக் காலம், புத்தாண்டுக்காலம், பெருநாள் போன்ற காலப்பகுதிளில் கட்டண அறவீடு அதிக தொகையாக காணப்பட்டது. ஆனால் சாதாரண காலங்களில் அவ்வாறான தொகை அறவீடு செய்யப்படவில்லை. | சந்தையின் நிலவரம் மற்றும் வருமானத்தினை பரிசீலனை செய்து அதன் பிரகாரம் பொருத்தமான தொகையினை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் கடந்த ஆண்டில் அஷ்ரப் ஞாபகார்த்த மண்டப வருமானத்தினை அதிகரிப்பதற்காக ரூபா 8,701,233 தொகை செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருந்தும், வருமானத்தினை அதிகரிப்பதற்காக முறையாக திட்டமிட்டு, விளம்பரப்படுத்தல்களை மேற்கொள்ளாததால் மீளாய்வாண்டில் ரூபா 102,000 தொகை மாத்திரமே வருமானமாக உழைக்கப்பட்டிருந்தது. | இனிவரும் காலங்களில் வாடகைப் பெறுமானத்தினை அதிகரித்து வாடகை வருமானத்தினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | புதிய முறைமையை அறிமுகப்படுத்தி போதியளவு விளம்பரப்படுத்தல்களை மேற்கொண்டு வருமானமீட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
| --- | --- | --- |
| சபைக்குச் சொந்தமானதும் மற்றும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற 13 வாகனங்கள் மற்றும் இழுவைப் பெட்டிகளின் பெறுமதிகள் மீள்மதிப்பிடப்பட்டு அதன் உண்மைப்பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் மீள்மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதிகளை மீள்மதிப்பிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபாரிசு |
| --- | --- | --- |
| சபையினால் பயன்படுத்தப்பட்டுவரும் 03 வாகனங்களின் உரிமையினை சபையின் பெயரில் மாற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரு வாகனங்கள் சம்மாந்துறை பிரதேச சபையினால் எவ்வித ஆவணங்களுமின்றி வழங்கப்பட்டதால் பெயரினை மாற்றம் செய்ய முடியாதுள்ளது. அத்துடன் ஏனைய வாகனத்தின் உரிமையினை மாற்றிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாகனங்களின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |